## சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு

# இந்திய அரசாங்கத்தின் அனுசரணையில் ஹோமியோபதி மருத்துவ பட்டதாரி புலமைப் பரிசில்கள் 2026/2027

இந்திய அரசாங்க அனுசரணையின் கீழாக இலங்கையைச் சேர்ந்த 10 மாணவ, மாணவிகளுக்கு மேற்கு வங்க பல்கலைக்கழகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கொல்கொத்தாவில் அமையப்பெற்ற தேசிய ஹோமியோபதி நிறுவனத்தில் (National Institute of Homoeopathy - NIH) 2026 / 2027 கல்வியாண்டிற்காக ஹோமியோபதி மருத்துவ பட்டதாரி கற்கைகளை மேற்கொள்வதற்கு புலமைப்பரிசில்களை வழங்குவது தொடர்பாக தகுதியானவர்களைத் தெரிவுசெய்து கொள்வதற்கு சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சின் சுதேச மருத்துவப் பிரிவினால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கற்கை நெறிக்காலம் 5 1/2 வருடங்களாகும். கற்கை நெறியை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்ததன் பின்னர், ஹோமியோபதி மருத்துவ பேரவையில் பதிவு செய்துகொண்டதன் பின் தகுதியுள்ள ஹோமியோபதி மருத்துவராக செயற்பட வாய்ப்புகள் கிடைக்கப்பெறும்.

**தகைமைகள்:-**

க.பொ.த. (உ/த) பரீட்சைக்கு விஞ்ஞான பிரிவில் தோற்றி பௌதிகவியல், இரசாயனவியல் மற்றும் உயிரியல் ஆகிய மூன்று பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்தியடைந்து அந்த பரீட்சையில் பொது ஆங்கில பாடத்தில் சித்தியடைந்துள்ள மற்றும் க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் ஆங்கில மொழியில் திறமைச் சித்தியுடன் சித்தியடைந்திருக்க வேண்டும். 2026-09-25ஆம் திகதியில் 18-25 வயதிற்கிடைப்பட்ட விண்ணப்பதாரர்கள் இதற்கு விண்ணப்பிக்கலாம்.

**விண்ணப்பிக்கும் முறை:**

அனைத்து விண்ணப்பதாரர்களும், பெயர், முகவரி, பிறந்த திகதி, வயது, நிரந்தர மற்றும் கைதொலைபேசி 02 இலக்கங்கள் (விண்ணப்பதாரரைத் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிடுதல் கட்டாயம் என்பதைக் கவனத்திற் கொள்ளவும்), கல்வித் தகைமைகள் மற்றும் க.பொ.த. (உ/த மற்றும் சா/த) பரீட்சையில் சித்தியடைந்த வருடம் போன்றவற்றைத் தெளிவாகக் குறிப்பிட்டு சுயமாகத் தயாரித்துக் கொள்ளப்பட்ட விண்ணப்பத்துடன் அனைத்து கல்வி சான்றிதழ்களினதும் அத்தாட்சிப்படுத்திய பிரதிகள் சகிதம் 2026-09-25ஆம் திகதி அல்லது அதற்கு முன் பின்வரும் முகவரிக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில், மின்னஞ்சலில், அல்லது நேரில் கொண்டு வந்து ஒப்படைத்தல் வேண்டும். அந்தக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ‘‘இந்திய அரசின் அனுசரணையில் ஹோமியோபதி மருத்துவ பட்டதாரி புலமைப்பரிசில் 2026/2027” எனக் குறிப்பிட வேண்டும் என மேலும் அறிவிக்கப்படுகின்றது. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்தின் பிரதியொன்றை ministryofindigenousmedicine@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.

**மேலதிக செயலாளர் (நிர்வாகம்),**
**சுதேச வைத்தியப் பிரிவு**
**சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு,**
**சுவசிறிபாய, இல. 385, வண பத்தேகம விமலவன்ச தேரர் மாவத்தை,**
**கொழும்பு 10.**

**தெரிவு செய்யப்படும் முறை:-** நேர்முகத் தேர்வுக் குழுவொன்றினால் தகைமைகள் பரிசீலனை செய்யப்பட்டதன் பின் திறமை அடிப்படையில் தகுதியானோர் தெரிவுசெய்யப்படுவர்.

**குறிப்பு:** இது தொடர்பில் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு செயலாளரின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும். கொல்கத்தாவில் அமைந்துள்ள தேசிய ஹோமியோபதி நிறுவனம் மற்றும் இயைபுடைய பாடநெறி தொடர்பான மேலதிக விபரங்களை, www.nih.ayush.gov.in என்ற இணையதளத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பித்துள்ளவர் களுக்கிடையில் அதிகூடிய தகைமையைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகத் தேர்விற்காக அழைக்கப்படுவர்.

அவ்வாறு தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் ஒரு வழிப்பயணத்திற்காக (செல்வதற்கு) மாத்திரம் விமான பயணச்சீட்டொன்று (Air Ticket) அமைச்சினால் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்பு கொள்வதன் மூலம் மற்றும் மேற்குறிப்பிடப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு அனுப்புவதன் மூலம் மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம். 011-2669451

**மருத்துவ நிபுணர் அனில் ஜாசிங்க,**
**செயலாளர்,**
**சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சு.**

SINCE 2014 Gazette.lk AMBITIONS REALIZED